மேற்கொள்ள மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்து கொண்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி, மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

34—

தொழிற்பேட்டை

***2062 திரு. மு.பெ. கிரி:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கம் தொகுதி, கட்டமடு ஊராட்சிப் பகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழினமே தனது உயிராய், தமிழ் மக்களே தனது உறவாய், தமிழ் மொழியே தனது உணர்வாய், தமிழர் முன்னேற்றமே தனது கனவாய், தன் வாழ்வையே அர்ப்பணித்து, தவ வாழ்வு வாழ்ந்து கொண்டிருக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதியில் கட்டமடு ஊராட்சிப் பகுதியில் சிட்கோ தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசின் பரிசீலனையில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 8]

திரு. மு.பெ. கிரி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கம் தொகுதி என்பது தமிழகத்திலே அனைத்து நிலைகளிலும் பின்தங்கிய தொகுதியாகும். அந்தத் தொகுதியிலே தமிழக அரசால் ஆரம்பிக்கப்படுகின்ற இந்தத் தொழிற்பேட்டை, இந்த நிதியாண்டிலேயே ஆரம்பிக்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிட்கோ நிறுவனத்தின் 46 ஆண்டுக் கால வரலாற்றில் உருவாக்கப்பட்ட சிட்கோ தொழிற்பேட்டைகளின் எண்ணிக்கை 70 ஆகும். ஆனால், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஐந்தாண்டுக் காலங்களில் மட்டும் சிட்கோ நிறுவனத்தின்மூலம் 29 இடங்களில் புதிய தொழிற்பேட்டைகளை நிறுவ ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவற்றில், இதுவரையில் 16 இடங்களில் 800 ஏக்கர் நிலப்பரப்பில், 841 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகளுடன் 16 புதிய சிட்கோ தொழிற்பேட்டைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. மீதமுள்ள 13 இடங்களில், 880 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகள் பல்வேறு நிலைகளில் நடைபெற்று வருகின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், தற்பொழுது திருவண்ணாமலையில் 15.54 ஏக்கர் நிலப்பரப்பில், 13 மேம்படுத்தப்பட்ட தொழில் மனைகள் மற்றும் 16 தொழிற்கூடங்களுடன் ஒரு தொழிற்பேட்டை செயல்பட்டு வருகிறது. இத்தொழிற்பேட்டையில் PVC pipe*-கள் மற்றும் விவசாய இயந்திரப் பாகங்கள் ஆகியவை தயாரிக்கப்பட்டு வருகின்றன. இங்கு சுமார் 1,000 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எங்கெல்லாம் தொழிற்பேட்டைகளை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளதோ, அங்கெல்லாம் கோரிக்கை வைக்கும் முன்பாகவே, தொழிற்பேட்டைகளை உருவாக்க நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அந்தவகையில், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சென்ற ஆண்டே (2015–2016)*

[திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி] [2016 ஆகஸ்ட் 8

திருவண்ணாமலை மாவட்டத்தில் ஒரு சிட்கோ தொழிற்பேட்டை உருவாக்கப்படுமென அறிவித்தார்கள். அந்த அறிவிப்பின்படி, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள் தற்போது கோரும் கட்டமடு கிராமத்தில் சென்ற ஆண்டே ஒரு புதிய சிட்கோ தொழிற்பேட்டையினை உருவாக்க ஆணையிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில், செங்கம் வட்டம், கட்டமடு கிராமத்தில் புதிய தொழிற்பேட்டை அமைக்க 83.78 ஏக்கர் நிலம் கண்டறியப்பட்டு, நில திட்ட அட்டவணை திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு அனுப்பப்பட்டு, சிட்கோவிற்கு நில உரிமை மாற்றம் கோரும் முன்மொழிவுகளை மாவட்ட ஆட்சியர் 8-7-2015 அன்று நில நிருவாக ஆணையர் அவர்களுக்கு அனுப்பியுள்ளார். நில நிருவாக ஆணையர், நில உரிமை மாற்ற முன்மொழிவுகளை அரசுக்கு அனுப்பி, அந்நிலத்தை சிட்கோவிற்காகப் பெறும்பொருட்டு, மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். அரசிடமிருந்து விரைவில் நில உரிமை மாற்றம் பெற்று, மேற்கூறிய கட்டமடு கிராமத்தில், புதிதாக சிட்கோ தொழிற்பேட்டை ஒன்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் உருவாக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.பெ. கிரி அவர்கள்.

திரு. மு.பெ. கிரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலையில் இருக்கின்ற சிட்கோ தொழிற்பேட்டையை விரிவுபடுத்துவதாகச் சொல்கின்றார்கள். எங்களுடைய கட்டமடு கிராமத்தில் புதிதாக சிட்கோ தொழிற்பேட்டை அமைப்பது சம்பந்தமாக, அரசுக்கு நில உரிமை மாற்றம் கோரும் ஆவணங்களும் அனுப்பப்பட்டிருப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே, கடந்த காலத்தில், கட்டமடு ஊராட்சியில் இருக்கின்ற புல எண் 214-லிருந்து 247 வரை இருக்கின்ற 83.78 ஏக்கர் இடத்தைக் கையகப்படுத்த வேண்டுமென்று, நான் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவராக இருந்த காலத்திலேயிருந்து கோரிக்கை வைத்திருக்கிறேன். ஏனென்றால், அது அரசுப் புறம்போக்கு இடமாகும். எனவே, உரிய முறையில்,

2016 ஆகஸ்ட் 8]

விரைவாக அதைச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதுவும், இந்த நிதியாண்டிலேயே, பின்தங்கிய பகுதியான அந்தப் பகுதிக்கு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வெறும் விவசாயிகளே நிறைந்து, விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கின்ற செங்கம் தொகுதி மக்கள், வேலை தேடி பாம்பே, மைசூர், பெங்களூரு, சென்னை போன்ற பெரு நகரங்களுக்குச் செல்கிறார்கள். அதைத் தடுக்கின்றவிதமாக, இந்த சிட்கோ தொழிற்பேட்டையை அரசு விரைவில் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.டி. ராஜேந்திர பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்திற்கு அடுத்தபடியாக வேலைவாய்ப்பையும், தொழில் வாய்ப்பையும் கொடுக்கின்ற ஒரே தொழில் சிட்கோ தொழிற்பேட்டை. அந்த அடிப்படையிலே, திருவண்ணாமலை மாவட்டத்தில் இந்த ஆண்டே சிட்கோ தொழிற்பேட்டை தொடங்கிட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களது ஆட்சியைப் பொறுத்தவரையில், சொன்னதைச் செய்யக்கூடிய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) சிட்கோ வரலாற்றிலேயே, 5 ஆண்டுக் காலத்திற்குள் 29 சிட்கோ தொழில் நிறுவனங்களைப் புதிதாகத் தொடங்கிய வரலாற்றுப் பெருமைக்குச் சொந்தக்காரர் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்ற இடத்தில் உடனடியாக சிட்கோ தொழில் நிறுவனம் அமைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, அதற்குத் தேவையான நிதியை ஒதுக்கி, இடங்களைத் தேர்வு செய்யும் பணியும் முடிந்துவிட்டது. ஆகவே, வெகுவிரைவில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திருக்கரங்களால் திருவண்ணாமலை மாவட்டத்தில் சிட்கோ தொழிற்பேட்டை தொடங்கி வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில், அங்கு மேலும் சில சிட்கோ தொழிற்பேட்டைகளை உருவாக்கிட ஏதுவாக, சிட்கோ நில வங்கிக்காக, செங்கம் வட்டம், பெரியகோலப்பட்டி கிராமத்தில் 50 ஏக்கர் நிலமும்; கண்ணக்குருகை கிராமத்தில் 24 ஏக்கர் நிலமும்; திருவண்ணாமலை வட்டம், கண்ணதன்பூண்டி கிராமத்தில் 20 ஏக்கர் நிலமும்; செய்யாறு வட்டம், அன்னக்காவூர் கிராமத்தில் 27.36 ஏக்கர் நிலமும்; ஆக, நான்கு இடங்களில் நிலம் கண்டறியப்பட்டு, அங்கும் புதிய தொழிற்பேட்டைகளை உருவாக்குவதற்கான நடவடிக்கைகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மு. சந்திரபிரபா, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

35—

தொழிற்பயிற்சி நிலையம்

***3855 திருமதி மு. சந்திரபிரபா:**

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஸ்ரீவில்லிபுத்தூர் தொகுதி, ஸ்ரீவில்லிபுத்தூரில் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) நிலோபர் கபில், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயுள்ளம் தங்கள் உள்ளம்! ஏழை மக்கள் வாழ்வினிலே ஏற்றம் தரும் விடிவெள்ளி! தொலைநோக்குப் பார்வையாலே நம் மக்கள் துயர் போக்கி, மாநிலத்தைச் சீர்தூக்கி, தடைகளைத் தகர்த்தெறிந்த தரணி போற்றும் தவப் புதல்வி! உங்கள் விரல் அசைவில் வெற்றி கிட்டும். (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் புகழ் என்றும்*